

நான் ஏன் எழுதுகிறேன்
www.banukumar.in
என்னை வாழ வைத்த சமுதாயத்திற்கு
உடல் ஆற்றலையும் அறிவின் விளக்கங்களையும்
அர்பணித்து சமூகத்
தொண்டாற்ற வேண்டும்
இதற்கு என் எழுத்தை
தேர்ந்தெடுத்து
எழுதி வருகிறேன்
பானுகுமார்
படைப்புலகம்

# நான் ஏன் எழுதுகிறேன்

## (100 தகவல்கள்)

### மன்னார்குடி பானுகுமார்

- நான் ஏன் எழுதுகிறேன்? எழுத்தின் மீது உள்ள காதலால் தமிழின் மீது உள்ள காதலால்....மானுடத்தின் மீது உள்ள காதலால்.
- என்னை உருவாக்கி வாழவைத்த சமுதாயத்திற்கு உடல் ஆற்றலையும் அறிவின் விளக்கங்களையும், அர்ப்பணித்து சமூகத் தொண்டு ஆற்ற வேண்டும். இதற்கு என் எழுத்தை தேர்ந்தெடுத்து எழுதி வருகிறேன்.
- ஆன்மீகத்தில் ஒரு யுக விழிப்பை எற்படுத்துவதற்காக ஆன்மீகத்தை அறிவியல் பார்வையோடு நோக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நான் எழுதுகிறேன்.
- இளமை நோன்பு, இல்லறம் இரண்டையும் முறையாக ஆற்றியதால் பொருள், இன்பம் எனும் இரு பிரிவுகளைப் பற்றி அனுபவ அறிவு கிடைத்துவிட்டது. இந்த இரண்டும், உடலையும், அலைந்து திரியும் மனதையும் பற்றிய அனுபவ அறிவும் கிடைத்து விட்டது.
- உயிர், மெய்ப்பொருள் என்னும் இரண்டு மறைபொருட்கள் மனிதன் என்ற இயக்க நிலையத்தில் அடங்கியுள்ளன. இவற்றையறிந்தால் தான் மனிதன் அறிவு முழுமையாகும். அதற்கு ஆசான் வேதாத்திரி மகரிஷி மூலம் உயிர்நிலை உணர்ந்து, அதன் மேல் மனதைச் செலுத்தி அகநோக்குப் பயிற்சியால் உயிரின் இருப்பு, இயக்கம், விளைவுகள் பற்றிய


அறிவைப் பெறும் காலமே வானப்பிரஸ்தம் எனும் அகத்தவப் பயிற்சிக் காலத்தை பயன்படுத்திக் கொண்டேன்.

- அகத்தவத்தால் அறிவு முழுமைபெற்று விட்டது. இயற்கையைப் பற்றிய முழு விளக்கமும் வாழ்வின் வளம், நெறிமுறைகள் பற்றியும் அனுபவமான அறிவும் கிடைத்துவிட்டது.
- பிறகு என்ன? வாழ்நாள் முழுவதும் ஆற்றவுள்ள கடமை என்ன? என்னை உருவாக்கி வாழவைத்த சமுதாயத்திற்கு உடல் ஆற்றலையும் அறிவின் விளக்கங்களையும், அர்ப்பணித்து சமூகத் தொண்டு ஆற்ற வேண்டும். இதற்கு என் எழுத்தை தேர்ந்தெடுத்து எழுதி வருகிறேன்.




- பழம் பழுத்து விட்ட பின் மரத்திலிருந்து விடுபட்டு வேறுபடுவதைப் போல, குடும்பம், பொருளுடைமை என்ற இரண்டு சிற்றெல்லைகளிலிருந்து பற்றுக்களை விட்டு, இயற்கை, உலகம் என்ற விரிந்த பற்றோடு வாழ்கிறேன்.
- இந்தப் பொருள், மக்கள் என்ற உரிமை காட்டும் செயல்களுக்குப் பதிலாக விரிந்த மனத்தோடு உலக மக்கள் அனைவருக்கும் தன்னை உரிமையாக்கி நான் அறிந்த அறிவின் முழுமைப் பேற்றின் விளக்கங்களை மக்களுக்குப் போதிக்கும் சமுதாயத் தொண்டினைச் செய்வதற்காக எழுதுகிறேன்.

- ”இயக்கங்களுக் எல்லாம் ஈர்ப்புத் தத்துவம் மூலம், பயத்துக்கெல்லாம் மூலம் பாசமும் பற்றும்” என்ற வகையில் அச்சம் என்பதை மடமையடா என்பதை சொல்ல எழுதுகிறேன்.
- ”என்னிலும் மேம்பட்ட ஒரு  சக்தியிடம்...அருட் பேராற்றலிடம்.... நான் நம்பிக்கை வைத்துள்ளேன்..  அது எனக்குள், ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு நாளும் பரவுகிறது. எனக்குள் இருக்கும் ஞானத்திற்காக, என்னை நானே திறந்து வைத்துள்ளேன் என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- இந்தப் பிரபஞ்சத்தில் ஒரே ஒரு அறிவாற்றல்தான் உள்ளது என்பதை நான் அறிவேன், புரிவேன்.  இந்த ஒரே ஒரு அறிவிலிருந்துதான் அனைத்து விடைகளும் பிறக்கின்றன” என்பதை உங்களுக்குச் சொல்ல எழுதுகிறேன்.
- என் உடலை ஒரு நல்ல தோழனாக அங்கீகரிக்கிறேன்.  எனது உடலின் ஒவ்வொரு செல்லிலும் தெய்வீகப் பேரறிவு நிறைந்துள்ளது.  அது சொல்லும் அறிவுரை மகத்துவமானது என்பதை நான் அறிந்துள்ளேன். புரிந்துள்ளேன்.  அந்த அறிவுரையைக் கவனமாகக் கேட்கிறேன்” என்பதைச் சொல்ல நான் எழுதுகிறேன்.






- நான் யாருமின்றி தனிமையில் இருந்தாலும் என்னைச் சுற்றிலும் யாவரும் உள்ளது போன்ற  ஓர் உணர்வினை தரும்.

என் எழுத்துக்களோடு நான் இருக்கின்ற போது அதற்காகவே நான் எழுதுகிறேன்.

- மண்ணில் இப்பிறப்பில் நோக்கத்தை நான் நிறைவேற்ற நான் எழுதுகிறேன்.
- ஒரு மரம் வளர ஓர் விதையாவது விதையுங்கள் என்பார்கள். விதைத்துவிட்டு செல்கிறேன். நான் இருக்கும் போது என் படைப்புகளின் போற்றலும் புகழும் எனக்குத் தெரியாது. ஆனால் என் மறைவின் பின் நிச்சயம் என் பெயர் சொல்லும். என் எழுத்துகள். நிச்சயம் சொல்லும் என்ற நம்பிக்கையில் நான் எழுதுகிறேன்.
- ”அருட்பேராற்றலிடம் இருந்துதான் அனைத்துத் தீர்வுகளும், அனைத்து நிவாரணங்களும், அனைத்துப் புதிய சிருஷ்டிகளும் பிறக்கின்றன. நான் அந்தச் சக்தியை அறிவேன். புரிவேன். நம்புகிறேன். நான் தெரிந்த கொள்ள வேண்டிய அனைத்தும் எனக்குப் புலப்படுகின்றன என்பதை நானறிவேன்” என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- அழகு மாறிக் கொண்டு இருக்கும், அன்பு ஊறிக் கொண்டே இருக்கும். தொழுகை தூய்மை வளர்க்கும். தோல்வி ஜெயத்தில் முடியும்” என்ற தத்துவங்களைச் சொல்ல நான் எழுதுகிறேன்.



- என் எழுத்துக்களும்.என்னை உற்சாகப்படுத்த முடியும். என் கவலைகளை மறக்கச் செய்யும். என்னை எப்போதும் மகிழ்ச்சியாக ஆனந்தமாக சுறுசுறுப்பாக இருக்கச் செய்யும்.




- "அருட்பேராற்றல் கருணையினால் எப்போதுமே நான் பாதுகாப்பாக உள்ளேன். தெய்வீகப் பேரருளால் பாதுகாக்கப்பட்டு வழி நடத்தப்படுகிறேன். ஆரோக்கியமாகவும் சுதந்திரமாகவும் வாழ்கிறேன்" என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- "பிறப்பு இறப்பு நடுவே பூவலக வாழ்வு இதை மறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை" என்ற நிலைமையை நினைவில் கொள்ள எழுதுகிறேன்."அருட்பேராற்றல் கருணையினால் உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம், உயர்கல்வி, உயர் ஒழுக்கம் பெற்று நிறைவாக வாழ்கிறேன்" என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- எழுதுவதற்கு ஒரு உள்ளார்ந்த தேவை இருப்பதால் எழுதுகிறேன். நான் எழுதுகிறேன்.




- நான் ஏன் எழுதுகிறேன்? என் சோம்பலை விரட்ட. மூளை துருப்பிடிக்காமல் இருக்க.
- ”எனது இருப்பின் அடி ஆழ மையத்தில் எல்லையற்ற நேசம் நிறைந்துள்ளது. இந்த நேசத்தை ஊற்றெடுக்க வைத்து வெளிக் கிளம்பச் செய்கிறேன். அது என் இதயத்தை, என் மனதை, என் உடலை, என் பிரக்ஞையை, எனது ஆதார இருப்பு நிரப்பி எனக்குள்ளிருந்து, அனைத்துத் திசைகளிலும் பரவிப் பாய்கிறது. மீண்டும் பன்மடங்கு அதிகமாக என்னை வந்தடைகிறது. எனக்கு மேலும் மேலும் அதிகமதிகமாகக் கிடைக்கும் அதே அளவு நேசத்தை மற்றவர்கள் மீது நான் செலுத்த வேண்டும். நேசத்திற்கு முடிவேயில்லை” என்பதை மானுடத்திற்குச் சொல்ல எழுதுகிறேன்.
- ”மனிதனின் மகத்துவம் மனிதன் அறியாத மயக்கத்தின் விளைவு. மனிதனின் வாழ்க்கையை மனிதன் பறிக்கிறான். மதியின் உயர்வும், நுட்பமும் பெற்றவன் மண்ணுலகில் இந்த மாசு ஒழிக்க முயல்கிறான்” என்று மனிதன் சிறப்பை மானுடம் தெரிந்து கொள்ள எழுதுகிறேன்.
- எழுதுவதால் நான் மேன்மையுறுகிறேன். அதற்காக எழுதுகிறேன். என்னுடைய பழைய பாணிகளை அமைதியாக, ஆக்கப் பூர்வமாகப் பார்ப்பது என இப்போது முடிவு செய்துள்ளேன்.
- மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளத் தயாராக உள்ளேன். நான் கற்றுக் கொடுக்கப்படுவதற்கு ஏற்ற நிலையில் உள்ளேன்.

- 

- என்னால் கற்றுக் கொள்ள முடியும். மாறுவதற்குத் தயாராக உள்ளேன். இப்படி மாறுவதில் வேடிக்கை யாகவும் விளையாட்டாகவும் என்னால் ஈடுபட முடியும்" என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.




- எண்ணியவெல்லாம் எண்ணியபடியே யாகும். எண்ணத்தில், உறுதியும், ஒழுங்கும் அமைந்திடில்" என்று. எப்படி எண்ண வேண்டும் என்பதை சொல்ல எழுதுகிறேன்.
- எழுதுவது என்பது ஒரு மன ஏகாக்கிரப்பயிற்சி. (தாரணை) தொடர்ச்சியாக எழுதுவதற்கு விஷயங்களைக் கோர்த்து எழுதுவதற்கு மனதின் எண்ணங்கள் சரியான ஒழுங்கில் அடுக்கப்பட வேண்டும். இப்படி அடுக்கப்பட்ட எண்ணங்கள்

எழுத்தில் வார்த்தையாக வரவேண்டும். இப்படி வந்தால் மனம் ஏகாக்கிரமடைகிறது.

- ஆக எழுதுதல் என்பது ஒரு ஏகாக்கிரம் அல்லது தாரணை என்னும் ஒரு யோகப் பயிற்சியே.
- இன்று பலர் தியானம் செய்கிறோம். என்றும் யோகம் செய்கிறோம் என்று கண்களை மூடி முயற்சிக்கிறார்கள். இதற்கு மனம் ஒருமைப்பட்டு சீராக இயங்க வேண்டும்.
- மனம் ஒருமைப்பட எமக்கு பிடித்தை ஒழுங்காக எழுதுவது ஒரு எளிய மார்க்கம்.
- இப்படி சீராக எழுதும் ஆற்றல் வந்தால் மனம் ஏகாக்கிரம் அடையும். இப்படி ஏகாக்கிரமடைந்த மனம் ஆனந்தத்தை அடையும். ஆனந்தமே பிரம்மம்.
- ”எதையாவது வெளியேற்ற வேண்டும் என்பதை நான் கண்டறியும்போது ஒரு பதையலைக் கண்டெடுத்தது போல எதிர் வினை புரிய வேண்டும் எனத் தீர்மானித்துள்ளேன்” என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- ”ஒவ்வொரு கணமும் நான் மாறிக் கொண்டிருப்பதைக் காண்கிறேன். உணர்கிறேன். புரிந்து கொள்கிறேன். எண்ணங்கள் இனிமேல் என்னை ஆட்டிப் படைக்க முடியாது. இந்த உலகத்தின் சக்தி நான்தான். சுதந்திரமாக வாழ வேண்டும் என முடிவெடுத்துள்ளேன்” என்பதை உங்களுக்குச் சொல்ல எழுதுகிறேன்.
- ”நிறைய கற்றுக் கொள்வும் எனனை மாற்றிக் கொள்ளவும் நான் தயாராக இருக்கிறேன். எனது இன்றை நிலைக்கு என்னை இட்டு வந்த கடந்த காலத்தை முக்கியமானதாகக் காண்கிறேன்” என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- ”இயற்கையை அறிந்து ஒத்து எண்ணுபவர் எண்ணம் எப்போதும் எவ்விடத்தும் கவலையாய் மாறாது” என்று கவலையை ஒழிக்க எழுதுகிறேன்.
- ”நேசம் கொள்வது என்னை மேன்மையாக உணர வைக்கிறது. அது எனது உள்ளார்ந்த கொண்டாட்டத்தின் வெளிப்பாடு” என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.

- ”உருவங்கள் கோடான கோடியாய், அவை உள்ளும் புறமும் அரூபமாய், ஊடுருவி நிறைந்தியங்கும் ஒருசக்தி - உயிராகும், இயற்கையாகும், கடவுளாகும்” என்று கடவுள் பற்றிய விளக்கத்தை விரிவாக மானுடத்திற்குச் சொல்ல நான் எழுதுகிறேன்.
- என்னை நானே சேிக்கிறேன். எனவே, என் உடல்மீது, மனம் மீது, எண்ணங்கள் மீது நேசம் நிறைந்த அக்கறை செலுத்துகிறேன். அந்த நேசத்துடன் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளையும் மென்பானங்களையும் அளிக்கிறேன். நேசத்துடன் அதைப் பராமரித்து. ஆடை அணிவித்து சேவை செய்கிறேன். எனது உடல் நேசத்துடன் எனக்குத் துடிதுடிப்பான ஆரோக்கியத்தையும் ஆற்றலையும் அளித்துக் கைமாறு செய்கிறது என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.




- ”எண்ணம் தானாக எழுந்து அலையாமல், எண்ணத்தில் எண்ணமாய் இருப்பதே யோகம்” என்று யோகத்தைப் பற்றி சொல்ல எழுதுகிறேன்.
- ”இதோ இப்போதே நான் இருக்கிமிடதிலிருந்தே என் மன மாளிகையின் அறைகளைத் தூய்மைப்படுத்த, அமைதிப்படுத்த தயாராக உள்ளேன்” என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- ஏன் எழுதுகிறேன்? வருகிறது, செய்கிறேன். சுவாசம் போல. மறக்கையில் நிற்கும். எழுத்தும்.
- ”கள்ளம், சோரம், கடன், குடி, பெரும்பாலும் மெள்ள அதிகரிக்கும் விஷமொக்கும் இயல்புடைத்து, உள்ள சுகம் போகும், உயிரையும் பலிகொள்ளும். கிள்ளி எறிவோம் கிடைக்கும் போது இவற்றை” என்பதை எச்சரிக்கவே எழுதி வருகிறேன்.




- எழுத்து என் வாழ்க்கை. எழுத்து என் தவம். எழுத்து ஒன்றே நான் வாழ்ந்தேன் என்பதற்கான அடையாளம். எழுதாமல்


இருந்தால் நான் இறந்துவிடுவேன். ஆயிரம் கரங்கள் கொண்டு இந்த மானுடத்தைத் தழுவிக் கொள்ள விரும்புகிறேன்.

- ”நான் என்னை நேசிக்கிறேன். எனது அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றி, எனக்கு ஆனந்தத்தை வாரி வழங்கும் ஒரு வசதியான இல்லத்தை எனக்காக ஏற்படுத்திக் கொண்டுள்ளேன். அதன் அறைகள் முழுவதிலும் நேசத்தின் நாத அலைகளை நிரப்பியுள்ளேன். எனவே நான் உட்பட அதில் அடியெடுத்து வைக்கும் அனைவரும் இந்த நேசத்தை உணர முடியும். புரிந்து கொள்ள முடியும். மேம்பாடு காணமுடியும் என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- என் தாய்மொழியில் எழுதுவது என்பது எனக்கு மிகப்பெரிய சவால். மாபெரும் கவிஞர்களும், எழுத்தாளர்களும் வாழ்க்கையை அதன் ஆழம் வரை தரிசித்த ஆளுமைகளும் நிறைந்த மொழி என் தாய்மொழி. அந்த மொழியில் என் எழுத்து கரைந்து போகும்போது, மானுடச் சமுத்திரத்தில் நான் கரைந்து போவேன். அப்படிக் கரைந்து போகும்போது கிடைக்கும் பரவசம் எல்லையற்றது




- உனக்கும் நல்லதாய், ஊருக்கும் நல்லதாய், நினைப்பதும், செய்வதும் நித்தியக்கடன் என்று கடமை உணர்ச்சியை விதைப்பதற்காக எழுதுகிறேன்.

- ”உடையில் ஒழுக்கம். உள்ளத்தில் கருணை, நடையில் கண்ணியம், நல்லோர் பண்பு என்ற பண்புகளை சொல்வதற்காக எழுதுகிறேன்.
- நான் எழுதுவதை அனுபவிக்கிறேன் என்பதால் எழுதுகிறேன், என் வாயைத் திறக்கும்போது நான் செய்வதை விட அதிகமான சிந்தனையுடன் என்னைத் தூண்டுகிறது.
- சமுக நலன் என்பது தற்காலிகமான பயனே. ஆனால் மெய் அறிவு, பக்தி என்பது நிரந்திரமானது. எனவே நான் மக்களுக்கு நிரந்திரமாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற நோக்கில் எழுதுகிறேன்.
- என் எழுத்தை அதிகம் பேர் வாசிக்க வேண்டும் என்பதற்காக ஒரு போதும் எழுத போவதில்லை. அப்படி என்னால் எழுத முடியாது என்பது அல்ல என் பிரச்சனை. என் லட்சியம் நிரந்திரத்தை நோக்கியதாக மட்டுமே உள்ளது. ஆதலால் நான் முடிந்த வரைக்கும் என்னோடு பயணிக்க வைக்கவே என் எழுத்துக்கள் அமைய வேண்டும் என்பதற்காக நான் எழுதுகிறேன்.
- ”என்னை நான் நேசிக்கிறேன். நானறிந்துள்ள அனைவரிடமும் நேசத்துடன் நடந்து கொள்கிறேன். எனது சிந்தனைகளிலும் நேசம் பளிச்சிடுகிறது. மற்றவர்களின்மீது நான் செலுத்தும் நேரம் பன்மடங்கு அதிகமாக என்னைத் திரும்ப வந்தடைகிறது” என்பதைச் சொல்ல நான் எழுதுகிறேன்.




- என் எழுத்தை ஒரே ஒரு ஆன்மா நேசித்தாலே என் எழுதின் நோக்கம் வெற்றி அடைகிறது. மேலும் ஒரே ஒரு ஆத்மா புரிந்து உணரும் போது அது படும் ஆனந்தமே எனக்கு கிடைக்கும் மிக பெரிய பரிசாகும். இந்த நோக்கத்துக்காகவே நான் எழுதி வருகிறேன்.
- ஒரு அறைக்குள் உட்கார்ந்து நாள் முழுவதும் எழுதுவது எனக்குப் பிடித்திருக்கிறது. நான் எழுதுகிறேன் ஏனென்றால், ஆன்மா, இறைநிலை, பிரபஞ்சம், மாயை, நான் யார்? என்று உணர்ந்து வாழ்ந்த, வாழ்கின்ற வாழ்க்கையை தெரிந்துக் கொள்ளட்டும் என்று. நான் எழுதுகிறேன் ஏனென்றால், எனக்கு இந்த கம்யூட்டர், பத்துவிரல்கள், மவுஸ், இவற்றின் வாசனை பிடித்திருக்கிறது. நான் எழுதுகிறேன்.
- ஆன்மீக வழியான இலக்கியத்தை மற்ற எல்லாவற்றையும் விட நம்புகிறேன். நான் எழுதுகிறேன் ஏனென்றால் அது ஒரு பழக்கம். வெறி. நான் எழுதுகிறேன் ஏனென்றால், நான் மறக்கப்படுவது குறித்து அஞ்சுகிறேன். நான் எழுதுகிறேன்

ஏனென்றால், அது தரும் அமைதியும் ஆனந்தமும், பிடித்திருக்கிறது.








- என்னை நானே நேசிக்கிறேன். எனவே, எனது வேலையை அனுபவித்துச் செய்கிறேன். அந்த வேலை எனது ஆக்கத்

திறன்களைப் பயன்படுத்திக் கொள்கிறது." என்பதைச் சொல்ல நான் எழுதுகிறேன்.

- தாளில், காலப்போக்கில், மற்றவர்களின் மனதில், ஒருவருக்காக ஒரு வீட்டை உருவாக்க ஒருவன் எழுதுகிறான்.
- நான் ஏன் எழுதுகிறேன்? நான் புத்திசாலி என்று மக்கள் நினைக்க வேண்டும் என்று அல்ல, அல்லது நான் ஒரு நல்ல எழுத்தாளர் என்று. என் தனிமையை முடிவுக்கு கொண்டுவர விரும்புவதால் நான் எழுதுகிறேன்.
- அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் எழுத்துப்பணி மரணிக்கும் வரை தொடரும்.**கடந்த காலத்தையும் தற்போதையதையும் தூண்டுவதற்கு**
  அது நடக்கும் நேரத்தில் எனக்கு மிகவும் உண்மையான ஒன்றுமில்லை.



- நான் எழுதும் வரை அனுபவம் மிகவும் உண்மையானதாக இல்லை என்பதால், எழுதுவதற்கான காரணத்தின் பகுதியாக இருக்கிறது. எல்லாவற்றையும் ஒன்று, உண்மையில், ஏதாவது ஒன்றை நடத்த வேண்டும், அதாவது கடந்த காலத்தை, தற்போது செய்ய முயற்சிக்கிறது.
- நான் எழுதுகிறேன், ஏனென்றால் எண்ணமே எக்காலத்திற்கும் வாழ்க்கையின் சிற்பி? எண்ண எண்ண இனிதே பயக்கும் என்பதை சொல்ல எழுதுகிறேன்.



- மாற்றம் என்பது என் வாழ்க்கையில் இயற்கை விதி. மாற்றத்தை நான் வரவேற்கிறேன். மாற்றமடைய நான் தயாராக இருக்கிறேன். என் சிந்தனையை, நான் பயன்படுத்தும் வார்த்தைகளை மாற்றிக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன். தங்குதடை இல்லாமலும் கொண்டாட்டத்துடனும் பழையதிலிருந்து புதியதற்கு நான் பயணமாகிறேன் என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- அறிவை உணர்ச்சி வெல்வது இயல்பு. அறிவால் உணர்ச்சியை வெல்லுவது உயர்வு என்பதை சொல்லவே எழுதுகிறேன்.
- உழைப்பினால் உடலும், உள்ளமும், உலகமும், பயன் பெறும் என்பதை மானுடம் உணர வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன்.

- நான் எழுதுகிறேன், ஏனென்றால் உலகம் முழுவதும் எனக்கு மிகவும் நன்றாக இருக்கிறது. நான் சிக்கலில் இருந்து வெளியே வர பிஸியாக இருக்க வேண்டும், பைத்தியம், மனச்சோர்வு ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். அதனால் நான் உலகில் ஒரு காரியத்தை தொடர்ந்து செய்து வருகிறேன். நான் அதிலிருந்து பிரம்மாண்டமான அளவு பெறுகிறேன்.




- நான் எழுதுவதை அனுபவிக்கிறேன் என்பதால் எழுதுகிறேன், என் வாயைத் திறக்கும்போது நான் செய்வதை விட அதிகமான சிந்தனையுடன் என்னைத் தூண்டுகிறது.
- நான் எழுதுவதற்கு முன்பு எனக்குத் தெரியாத ஒன்றைக் கற்றுக் கொள்வதற்காகவே எழுதுகிறேன்.
- எதற்காக எழுதுகிறேன்?" என் வாழ்வு சமுதாயத்துக்குப் பயனுள்ளதாக வேண்டும் என்ற காரணம். மூடநம்பிக்கையுள்ள ஆன்மீகத்தை அகற்றவும், சுரண்டலும் அநீதியும் நிறைந்த

சமுதாயத்தை ஒழிக்கவும், புதிய ஒளிமிக்க சமுதாயத்தை தோற்றுவிக்கவும் என்னாலான பணியை எழுத்து மூலம் செய்ய வேண்டுமென்ற காரணம்.

- உலகில் வறுமை என்பது இல்லை. அறிவு வறுமைதான் உள்ளது. கடவுள் என்றால் என்ன? இதனை மானுடத்திற்குப் புரிய வைக்க, அறிவு வறுமையைப் போக்க எழுதுகிறேன். சிலர் அறிவை வளர்த்து கொள்ள படிப்பார்கள். சிலர் போழுது போக படிப்பார்கள். என் ஆன்மீக படைப்புகள் அறிவை வளர்க்க உதவும்.
- நான் எழுதுகிறேன் ஏனென்றால், உலகின் அத்தனை அழகையும், செல்வங்களையும் எழுத்தில் வார்ப்பது உற்சாகமாக இருக்கிறது.




www.banukumar.in

"

- சமுக கருத்தை சொல்ல பல எழுத்தாளர்கள் உள்ளனர். ஆனால் மெய்மை கருத்தை எழுதுபவர்கள் மிக குறைந்தோரே.

- வாழும் காலத்தில் மரணம் பற்றி சிந்தனை வராமல் ஆணவத்தோடும், அகங்காரத்தோடும் இருந்து விட்டு மரணம் நெருங்கும் போது ஆண்டவனை அந்த சிக்கலான நேரத்தில் நினைத்து பார்க்க இயலாது. அதலால் மரணத்திற்கு முன் கூட்டியே மரண பயம் நீங்க பொழுது போக்கிலும் பயன் பெற எழுதுகிறேன்.
- என் படைப்புகளை மேலோட்டமாக படித்தால் எதுவும் புரியாது தான். மேலும் ஆன்மீகம் என்பதே வேண்டாம் என பலர் எண்ணுகின்றனர். ஆனால் மரணிக்கும் போது எந்த உறவும் உதவாது. இறைவன் மட்டுமே மரணம் வரும் போது உதவ முடியும். ஆதலால் மரணத்தை எதிர் கொள்ள பொழுது போக்கிலும் ஒரு பயனை அடையவே நான் எழுதுகிறேன்.
- ”கடவுள் எல்லாமாக இருக்கிறார். நானுமாக இருக்கிறார். இதை மானுடத்திற்குச் சொல்ல எழுதுகிறேன்
- ஒரு யுக விழிப்பை ஆன்மீகத்தில் ஏற்படுத்துவதற்காக நான் எழுதுகிறேன். இதில் ஓரளவு வெற்றிகளும் வாய்த்து வருகின்றன.




- எனவே எனக்கும் கடவுளுக்கும் ஒரு சங்கிலிப் பிணைப்பு இருக்கிறது. அதன் ஒரு முனை நான், இன்னொரு முனை அவர் என்னும்போது, இந்தச் சங்கிலியைப் போட்டுவிட்டு அவரை எங்கே போய்த் தேடினால் கிடைபார்?" என்று கடவுளைப் பற்றிய விழிப்புணர்வு பெற எழுதுகிறேன்.
- ஆசை இருந்தால்தான் லட்சியத்தை எய்த முடியும். ஆனால் அந்த ஆசை பேராசையாக மாறக்கூடாது என்பதற்காக நான் எழுதுகிறேன்.
- நான் சுயமாக சிந்தித்து தான் எதுவாக இருந்தாலும் எழுத முடியும். உயிரை உணர்ந்தால் மட்டுமே ஆன்மீகம் சுயமாக எழுத இயலும். எனவே என் அனுபவத்தை சிறிது கற்பனை கலந்து எனது படைப்புகளில் பொழுது போக்கிலும் பயன் அடைய எழுதுகிறேன்.
- மின்னலின் வாழ்வு கணநேரம். ஆனால் அக்கண நேரத்தில்:

*"..சூழம் இருள் நீங்கும்.*
*சுடர் விளக்குப் போலிங்கு*

*சோதி கொழுத்திச்*
*சோபிததைச் செய்து விட்டு*
*ஓடி மறைகிறது...."*

- இம்மின்னல் எனக்குணர்த்தும் செய்தி என்ன? "சில நாட்களே நீ இவ்வுலகில் வாழ்ந்தாலும் மக்களுக்கும், உலகுக்கும் பயனுள்ளவனாக வாழ். இன்று நீ இருக்கிறாய். நாளை இறந்து விடலாம். ஆகவே நன்றே செய்க. அதையும் இன்றே செய்க" இது தான் மின்னல் சொல்லித் தரும் பாடம்.





- இருளை விரட்டி ஒளியைப் பரப்பும் மின்னல் சமுதாயத்தில் சூழ்ந்துள்ள மடமை,வறுமை முதலான இருள்களை நீக்கி, அறிவையும் ஆனந்தத்தையும் பரப்பும்படி எழுதுவதற்கு இறைநிலை எனக்குப் பணித்தது.

- வாழ்க்கையையே இதற்காக அர்ப்பணிக்கவேண்டும் என்ற ஆசை மேலிட்ட நான் என் எழுத்தையும் அத்துறைக்கே பயன்படுத்த வேண்டும் என்று நினைத்ததில் வியப்பில்லை அல்லவா?

- என் வாழ்க்கை எப்போதுமே புத்தம் புதுப் பொலிவோடு உள்ளது. என் வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் புதுமையாகவும், பொலிவு பொங்குவதாகவும் முக்கியத்துவும்

வாய்ந்ததாகவும் அமைந்துள்ளது என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.


- எண்ணங்கள் என்றால் என்ன? எண்ணங்களை நன்மை பயக்குமாறு உண்டாக்குவது எப்படி என்பதை எழுதுகிறேன்
- துயரத்தை ஏக்கமாகவும் தனிமையை நினைவுகளாகவும் மாற்ற முயற்சிக்கவே நான் எழுதுகிறேன்.




- ”நான் விரும்பும் என் உலகில் அனைத்துமே நன்றாக உள்ளன என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- எழுதுவதற்கு என்று என்றென்றைக்குமான அடிப்படைக் காரணம் ஒன்றுண்டு. அது ஒருவனுக்கு இந்த உலகத்திற்கு சொல்ல ஒரு சேதி இருக்கிறது என்பதுதான். ஒரு சமானியனுக்கு எந்த சேதியும் இல்லையா? இருக்கிறது. அவனுக்கும் சொல்ல ஒன்று உண்டுதான். ஆனால் அவனுக்கு சொல்லியே தீரவேண்டிய அவசியமோ நெருக்கடியோ இல்லையே. நீட்டிப் படுத்தால் தூக்கம் வந்து விடுகிறது என்றால் எழுதுவதற்கு அவசியமும் இல்லையே.
- நான் விரும்புவதை அப்படியே உருவாக்கிக் கொள்ள என்னுடைய உறுதியேற்கும் சிந்தனையை நான்

பயன்படுத்துகிறேன். இன்றைய தினம் புத்தம் புதிய நாள். நான் புத்தம் புதிய மனிதன். நான் மாறுபட்டுச் சிந்திக்கிறேன். மாறுபட்டுப் பேசுகிறேன். மாறுபட்டுச் செயல்படுகிறேன். மற்றவர்கள் என்னை மாறுபட்ட முறையில் நடத்துகின்றனர்." என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.

- எழுதுவதால் மானுடம் விழித்துக் கொள்கிறது. அதற்காகவும் எழுதுகிறேன்.
- "நெஞ்சக் கதவைத் திறந்துவிடு. ஒரு நேசக் காற்று வீசட்டும்" என்று இளைஞர்களை தட்டி எழுப்புவதற்காக நான் எழுதுகிறேன்.
- அழகையும் காதலையும் எழுதுவதே தொழிலாகிவிட்ட நாளில், அகிலத்துப் பிரச்சினைகளில் மானுடத்தினை அழைத்துச் செல்வதற்காக நான் எழுதுகிறேன்.





- இளைய சமுதாயம் மறக்காமல் இருக்க, வள்ளுவரையும், தாயுமானவரையும், மாணிக்கவாசகரையும், வள்ளலாரையும், பாரதியையும், வேதாத்திரி மகரிஷியையும் நினைவுப்படுத்துவதற்காக எழுதுகிறேன்.

- நம் அனைவரின் ஆன்மாவும் ஒன்றுதான் என்பதை அறிந்து கொண்ட, புரிந்து கொண்ட நான், யாராக இருந்தாலும் எப்படிப்பட்ட மனிதராக இருந்தாலும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

- இன்றைய சமூகப் பிரச்சனைகளை எதிர்த்துப் போரிட, ஒரு புரட்சி விழிப்புத் தேவைப்படுகிறது என்பதில், யாருக்கும் இரண்டாவது கருத்து இருக்க முடியாது. இந்த புரட்சியை உண்டாக்க நான் எழுதுகிறேன்.

- என் சிந்தனைகளை மாற்றிக் கொள்வது என்னை நல்ல விதமாக உணர வைக்கிறது. இன்றைய நாளை ஒரு மகிழ்ச்சித் திருநாளாக அனுபவிக்க நான் கற்றுக் கொள்கிறேன் என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.

- அறநெறியும் இறையுணர்வும் இரண்டும் வினைப்பதிவுகளைப் போக்கும் வழிகளாகும் என்பதை விதைக்க நான் எழுதுகிறேன்.




- எதிர்கால சமூகத்தை மிக உன்னத நிலைக்கு உயர்த்திச் செல்ல இலக்கியம் ஒன்று தேவை என்பதாலும் எழுதுகிறேன்.




- "மன்னிப்பது என்பது நான் நினைத்ததைவிட எனக்குச் சுலபமாக உள்ளது. மன்னிப்பது என்னை இலகுவாகவும் சுதந்திரமாகவும் உணர வைக்கிறது. என்னை மேலும் மேலும் நேசிக்கக் கற்றுக் கொள்வதில் மகிழச்சி பொங்குகிறது. அதிகமதிகமான ஆத்திரத்தை வெளியேற்றும் அதே அளவுக்கு அதிக அன்பை நான் வெளிப்படுத்துகிறேன்." என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.




- 'நான் ஏன் எழுதுவது? நான் புத்திசாலி என்று மக்கள் நினைக்க வேண்டும், அல்லது நான் ஒரு நல்ல எழுத்தாளர் என்று கூட நான் விரும்பவில்லை. எனது தனிமையை முடிவுக்கு கொண்டுவர விரும்புவதால் எழுதுகிறேன்.
- **கடந்த காலத்தின் வழியாக இதோ இந்தத் தருணத்திற்கு என்னை நானே கொண்டு வந்ததற்காக என்மீது நேசம் கொள்கிறேன் என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.**
- "வாளினும் வலிமை பொருந்தியது எழுதுகோல். வாழ்க்கைப் போராட்டத்தில் நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஆயுதம்

எழுதுகோல். அதனால் எழுதுகிறேன். எழுதுகோல் என் தெய்வம். இப்போது எனது கணிணிதான் தெய்வம்.

- "நான் எழுதுவதை நான் ரசிப்பதால் எழுதுகிறேன், மேலும் என் வாயை சுடும் போது எழுதுவது என்னை விட ஒத்திசைவாக சிந்திக்க தூண்டுகிறது."
- எழுதுவதால் எனது மொழி வளம் பெறுகிறது. அதற்காகவும் எழுதுகிறேன்.
- எழுதுவதால் மானுடம் இன்பமும் ஆனந்தமும் வளமும் எய்துகிறது. அதற்காகவும் எழுதுகிறேன்.
- எழுதுவதால் துன்பங்கள், சோகங்கள், மனச்சோர்வு சற்று விலகி எனக்கு இதமளிக்கிறது. எனது வாழ்வின்மீது மீண்டும் உறுதி கொள்ள நம்பிக்கை கொள்ள ஒரு வழிமுறையே எனது எழுத்து.
- என் உலகில் நான் யார் என்பதைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகக் காணப்படும் நேசம் நிறைந்த மக்களை மட்டுமே நான் ஈர்த்துக் கொள்கிறேன் என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.
- தனிமைக்காக நான் எழுதுகிறேன். அழிவேயில்லாத நூலகங்களின் புத்தக அடுக்குகளில் என் புத்தகங்களின் வாயிலாக அமர்ந்து கொள்ள எழுதுகிறேன்.
- நான் எழுதுகிறேன், ஏனெனில் அது என் அமைதியை உருவாக்குகிறது. நான் என் கனவுகளிலிருந்தும் எழுதுகிறேன்.
- நல்லது அல்லது கெட்டது, சரி அல்லது தவறு என எதுவுமே இல்லை. கடந்த காலம் முடிந்து விட்டது. நாம் அதைக் கடந்து வந்துவிட்டோம். இந்தக் கணத்தின் அனுபவம் மட்டுமே எஞ்சியுள்ளது. என்பதை உங்களுக்குச் சொல்ல எழுதுகிறேன்.
- அடுப்படிகள் இடுப்பொடிக்க, அலுவலகம் முதுகொடிக்க, படுக்கையறை எலும்பொடிக்க, கிணற்றடியில் கை சலிக்க.... படாத பாடுபடும் பெண்ணினம் அந்த வேலிகளை உடைத்துக்

கொண்டு வெளியுலகுக்கு வர வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன்.

- கொள்கலனும் அதன் தன்மை வலிவும் கண்டே, குறிப்பிட்ட பொருளை அதில் வைப்போமா போல் உள்ளம் உடல்தரம் இயல்பு வலிவு கண்டே உலகை அறிந்தே துய்த்து வாழ வேண்டும் என்று வாழத் தெரிந்து கொள்ள நான் எழுதுகிறேன்.
- என்னை நானே நேசிக்கிறேன். எனவே கடந்த காலத்தை மன்னித்து, அதையும் அதன் அனைத்து அனுபவங்களையும் வெளியேற்றி விடுகிறேன். இப்போது நான், சுதந்திரமாக உள்ளேன். என்னை நானே சேிக்கிறேன். எனவே, இந்தக் கணத்தில் முழுமையாக வாழ்கிறேன் என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.




- ’என்னால் கட்டுப்படுத்த முடியாத விஷயங்களுடன் சமாதானம் செய்ய நான் எழுதுகிறேன்.

- அமைதியைப் பெற பொறுமை, சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல் இம்மூன்றும் எல்லைன்றித் தேவையாகும் என்பதை வலியுறுத்த நான் எழுதுகிறேன்.
- நேசத்துடன் என் கடந்த காலத்தை திரும்பிப் பார்க்கும் நான் பழைய அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதை உங்களுக்குச் சொல்ல நான் எழுதுகிறேன்.
- கடவுள் என்றால் என்ன? என்பதை மானுடம் தெளிவாகப் புரிந்து கொள்ள நான் எழுதுகிறேன்.




- விதிரேகை தனைக்கண்டு பயப்படாதே! விரைந்ததனை விஞ்ஞான ரேகையாக்கு என்று நதிவேக எழுத்துக்களை படைப்பகளில் இழையோடுவதற்காக நான் எழுதுகிறேன்.

- மனம் என்றால் என்ன? மனதை எப்படி அறிந்து கொள்வது? புரிந்து கொள்வது. மனதை எப்படி ஒருமுகப்படுத்துவது என்பதற்காக நான் எழுதுகிறேன்.
- அறிவுக்கு அடிமையாவதே பக்தி. அறிவை அறிவால் அறியப் பழகுதல் யோகம். அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி. அறிவை அறிந்தோர் அன்பின் அறமே ஞானம்” என்றவாறு பக்தி, யோகம், முக்தி, ஞானம் பற்றி எழுதுகிறேன்.
- ஒவ்வொரு கணத்தையும் சிறந்ததாக நினைத்து. அனுபவிக்கும் நான், எனது எதிர்காலம் பிரகாசமாக கொண்டாட்டமானதாக, பாதுகப்பானதாக அமையும் என்பதை அறிந்துள்ளேன் என்பதைச் சொல்ல நான் எழுதுகிறேன்.
- நமக்கு பலன் கிடைக்கும் வகையில் வாழ்க்கையின் மேன்மையை, முழுமையை நான் உட்பட நாம் ஒவ்வொருவரும் அனுபவிக்கிறோம் என்பதை மானுடத்திற்குச் சொல்ல நான் எழுதுகிறேன்.



- விழிவிழி உன்விழி நெருப்புவிழி, உன் விழிமுன் சூரியன் சின்னப்பொறி  கால்நகம் கீறிய கோடுகள் வழியே கங்கையும் சிந்துவும் காவிரியும் ஓடிவரும் கச்சிதமாய், கவர்ச்சியாய், கவித்துவம் மின்னலிடும் இப்படிப்பட்ட எழுத்துக்களை எமது படைப்புகளில் பதிவு செய்ய நான் எழுதுகிறேன்.
- "அணுவைக் கடந்தப்பால் நிகழ்ச்சியுண்டோ? அறிவுக்கப்பால் ஏது சுகதுக்கங்கள்? அணுசக்தி வேற வேறா? அறிவறிந்தால் ஆதியென்ற பெருவெளியே அனைத்தமன்றோ என்றவாறு ஆதி என்ற பெருவெளிப் பற்றி எழுதுகிறேன்.
- பரபரக்கும் உலக வாழ்க்கைக்கு நடுவே நின்றுகொண்டு, காணுமிடமெல்லாம் குற்றம் குற்றம் என்று கர்ஜிக்கையில்; கத்தியெடுத்து சீவ முடியாத தலைகளை எழுதுகோல் பிடித்து எச்சரிக்கையாவது செய்ய நினைத்து, எழுதித் தீர்க்கிறேன்.
- வறுமைக்கோடு, சாதிப் பாகுபாடு. பல பல மதங்கள், கடவுள் என்றால் என்ன என்ற அறியாமை, அறிவைப் பற்றிய விழிப்பின்மை,...லட்சியம் இல்லாமல் பயணிக்கும் மானுடம், உடல், உயிர், மனம் என்ன என்று தெரியாமை, உணராமை, புரியாமை.......இந்த இருட்டுகள் விலக, புதிய விடியல் வருவது எப்போது? இந்த நோக்கம் நிறைவேறவே நான் எழுதுகிறேன்.




- "என்னுடைய புதிய உலகம், எனது புதிய சிந்தனையின் ஒரு பிரதிபலிப்பு. புதிய விதைகளை விதைப்பதில் கொண்டாட்டம் பொங்குகிறது. மகிழ்ச்சி பெருக்கெடுக்கிறது. இந்த விதைகள், எனது புதிய அனுபவங்களாகப் பயனளிக்கும் என்பதை அறிந்திருப்தால்தான் இந்த ஆனந்தப் பரவசத்தில் திளைக்கிறேன். என் உலகில் அனைத்துமே நன்றாக உள்ளன" என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.

- "சூரியனைக் கூட சொக்கட்டான் ஆடலாம்" என்ற வரிகளுக்கேற்ப பெண்ணினத்தின் மென்மையை அல்ல, மேன்மையைச் சொல்ல நான் எழுதுகிறேன்.

- அகத்தாய்வு என்பது தூய்மையை நாடிச் செல்லும் தெய்வீகப் பயணம். எண்ணம் ஆராய்தல், ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், கவலை ஒழித்தல், நான் யார்? என்ற பயிற்சிகள்

மூலம் அகத்தை ஆய்வு செய்ய மானுடத்தைக் கூவி கூவி அழைக்க நான் எழுதுகிறேன்.




- இளைய தலைமுறையினருக்கு, என்னால் எதுவும் சாதிக்க முடியும் என்கிற தன்னம்பிக்கையை, என் மொழியால் எல்லாம் முடியும் என்கிற தமிழ் நம்பிக்கையை, என் இனத்தால் சாதனைகள் படைக்க முடியும் என்கிற சமூக நம்பிக்கையை விதைப்பதற்காக நான் எழுதுகிறேன்.
- நான் வாழும் இந்த முடிவில்லாத வாழ்க்கையில் எல்லாமே முழுமையாக, கச்சிதமாக, பரிபூரணமாக அமைந்துள்ளன என்பதை மானுடத்திற்குச் சொல்ல நான் எழுதுகிறேன்.
- அருட் பேராற்றலிடமிருந்து எனக்குத் தேவையான அனைத்துமே கிடைக்கின்றன. உரிய தருணத்தில், உரிய இடைவெளியில், உரிய இடத்தில் கிடைக்கின்றன? என்பதைச் சொல்ல எழுதுகிறேன்
- நான் இந்தப் பிரபஞ்சத்தில் அன்புக்குரிய குழந்தையாக இருப்பதால், இந்தப் பிரபஞ்சம் அன்போடும் அக்கறையோடும் என்னை இன்னும் என்றேன்றும் கவனித்துக் கொள்கிறது.

எனது உலகத்தில் அனைத்துமே நன்றாக உள்ளன என்பதைச் சொல்ல எழுதுகிறேன்.

- யாதும் ஊரே யாவரும் கேளீர்“ என்ற வாக்கின்படி நடமாடும் தெய்வங்களாக மானுடத்தை அனைவரும் பார்க்கவேண்டும். ஒத்தும் உதவியும் வாழ வேண்டும் என்பதற்காக நான் எழுதுகிறேன்.
- நான் என்னுடைய வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் உயிருக்கும் தீங்கு செய்ய மாட்டேன். என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன் என்ற பண்பாட்டை விதைக்க நான் எழுதுகிறேன்.







- நமது ஆறாவது அறிவு வேலை செய்ய வேண்டும். நமக்குத் தெரியாமலே நமக்குள்ளாக ஒரு சக்தி. பேராற்றல் பெற்ற தெய்வீக சக்தி ஊடுருவி இருந்து கொண்டு ஒவ்வொரு செயலையும் இயக்கத்தையும் நடத்துகிறது என்பதை யூகித்துணர முடிகிறதல்லவா? அதுதான் அதுதான் கடவுள், இறைவன் என்ற விழிப்புணர்வை மானுடம் பெற எழுதுகிறேன்.
- நீதிநெறி உணர் மாந்தராகி வாழும் நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம் என்று தொண்டின் பெருமையை சிறப்பை மானுடத்திற்கு கொண்டு செல்ல நான் எழுதுகிறேன்.

- வாழும் தலைமுறைக்கு, நிகழ்கால வாழ்க்கையில் மூட நம்பிக்கை....வளரும் தலைமுறைக்கு, எதிர்கால வாழ்க்கையில் அவநம்பிக்கை....இவர்களுக்குத் தன்னம்பிகையூட்டுகிற நன்னம்பிக்கை முனையாகப் எழுத்து இருக்க வேண்டும் என்பதற்காக நான் எழுதுகிறேன்.

## துணைநின்ற நூல்கள்

1. நீங்களும் எழுதலாம் வாங்க
2. புத்தகம் எழுதலாம் வாங்க
3. நானும் என் எழுத்தும்
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க.
6. இணையதள தகவல்கள்
7. பானுகுமார் படைப்புலகம்

# பானுகுமார் படைப்புலகம்

(171 புத்தகங்கள -31.12.2021 வரை)

PDF www.banukumar.in







## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
4. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
5. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன் என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்

18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்
19. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரியமும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்சிதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.

3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (**ஒப்பாய்வு**)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2

3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுமானவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்

30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## **தன்னம்பிக்கை தன்னம்பிக்கை**

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## **சிறுகதைகள்**

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## பானுகுமார் படைப்புலகம்

1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

## கம்பனும் வேதாத்திரியமும்


1. கம்பனும் வேதாத்திரியமும் 1 (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் 2 (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் 3 (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் 4. (மானுடம் வென்றதம்மா)



1. Vethathiriam banukum (Youtube channel)

2. Thayumanavar banukumar (Youtube channel)

3. Kumar vadivelu (Youtube channel)




vethathiriam Banukumar

## (Youtube channel) Titles

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும் வேதாத்திரியமும்
8. ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்ப ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
31. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33. புத்தக வெளியீடு

34. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38. வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43 .ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45 ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47. காலமெல்லாம் வேதாத்திரியம்
48. வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49. என்னைச் செதுக்கிய நூல்
50. தினசரி தியானம் சனவரி
51. தினசரி தியானம் பிப்ரவரி
52. தினசரி தியானம் மார்ச்
53. தினசரி தியானம் ஏப்ரல்
54. தினசரி தியானம் மே
55. தினசரி தியானம் ஜூன்
56. தினசரி தியானம் ஜூலை
57. தினசரி தியானம் ஆகஸ்டு
58. தினசரி தியானம் செப்டம்பர்
59. தினசரி தியானம் அக்டோபர்
60. தினசரி தியானம் நவம்பர்
61. தினசரி தியானம் டிசம்பர்
62. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67. தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1

69. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72. மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76. புலவர் தியாகராஜனார் பாகம் 1
77. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82. ஆன்மீகம் ஆன்மீகம்
83. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86. தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87. சுயமுன்னேற்றம்
88. பத்திரகிரியார் சிந்தனைகள்
89. மன்னார்குடி
90. ஆராய்ச்சி - நன்மக்கட்பேறு
91. பொதுவானவை
92. மனைவிக்கு மரியாதை
93. திருமூலர் சிந்தனைகள்.
94. ஆண்டாள் சிந்தனைகள்
95. திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96. திருக்குறள் சிந்தனைகள்
97. அப்பர் சிந்தனைகள்
98. பட்டினத்தார் சிந்தனைகள்
99. பட்டினத்தார் ஒப்பாய்வு
100. சிவவாக்கியார் சிந்தனைகள்
101. ஔவையார் சிந்தனைகள்
102. சித்தர்கள் சிந்தனைகள்
103. திருமங்கையாழ்வார்

104. வள்ளலாரின் சிந்தனைகள்
105. பசி என்னும் பாவி
106. பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?
120. வேதாத்திரியம் மானுட வேதம்
121. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
122. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்
123. வேதாத்திரியப் பார்வையில் கருணாகரக் கடவுள்
124. மனவளக்கலையின் மகத்துவம்
125. அருட்தந்தையே நீ ஒரு அற்புதம்
126. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவர் காட்டும் ஆறு பகைவர்கள்
127. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
128. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாள் கண்ணி பாகம் 1
129. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
130. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 1
131. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 2
132. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 3
133. புலவர் தியாகராஜனார் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் பாகம் 2

134. புலவர் தியாகராஜனார் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் பாகம் 3

135. தாயுமானவரின் தத்துவங்கள்

136. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள் (வேதாத்திரியம் ஒப்பாய்வு 2)

137. பேரக்குழந்தைகளை மகிழ்வது எப்படி?

138. வேதாத்திரியப் பார்வையில் மனிதனும் மதமும் பாகம் 1

139. திருமந்திரமும் வேதாத்திரியமும்

140. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

141. நானும் என் எழுத்தும்

143. நீங்களும் எழுதலாம் வாங்க

144. புத்தகம் எழுதலாம் வாங்க

145. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க

146. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க

147. நான் ஏன் எழுதுகிறேன்.

148. வாழ்க்கையை வெற்றி கொள்வது எப்படி? (வேதாத்திரியப் பார்வையில் 100 டிப்ஸ்)

149. மானுடம் சிறந்த வாழ்க்கை வாழ வேதாத்திரியத்தின் பத்து கட்டளைகள்

150. கம்பனும் வேதாத்திரியமும் (இலக்கியத் திறனும் கருத்தியலும்


குரு அருள்
வாழ்க வளமுடன்
மிகச் சிறந்த
ஆன்மீக
சொற்பொழிவுகளுக்கு
யூடியூப்
சேனல் பெயர்
YouTube
VETHATHIRIAM BANUKUMAR
Subscribe
கண்டு பேரின்பம் அடைவோம்
சப்ஸ்கிரைப் செய்வோம்
பிறருக்கும் பகிர்வோம்